செ. கு. எண்: 125 நாள்:06.10.2019

# <u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 6.10.2019</u>

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், விண்ணவனூர் கிராமத்தைச் சேர்ந்த திரு.துரைசாமி என்பவரின் மகன் திரு. பச்சையப்பன் என்பவர் கிணறு ஆழப்படுத்தும் பணியின் போது, கயிறு அறுந்து விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

வேலூர் மாவட்டம், அரக்கோணம் வட்டம், பள்ளூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. ரஜினி மற்றும் அவரது மகன் சிறுவன் தினேஷ் ஆகிய இருவரும் சாலை விபத்தில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாவட்டம், அன்னூர் வட்டம், அல்லப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. முருகேசன் மற்றும் அவரது மகள் செல்வி கௌரி மற்றும் திரு. தங்கராஜ் என்பவரின் மகன் செல்வன் பிரதீப்குமார் ஆகிய மூன்று பேரும் ஆற்றில் குளித்துக் கொண்டிருந்த போது, எதிர்பாராத விதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு வட்டம், கே.ஜி ஏரியூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. வேல்முருகன் என்பவரின் இரண்டு குழந்தைகள் சிறுமி ஹரிணி மற்றும் சிறுமி பிரித்திகா ஆகிய இருவரும் குட்டையில் தேங்கியிருந்து நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

நீலகிரி மாவட்டம், பந்தலூர் வட்டம், நெல்லியாளம் கிராமத்தைச் சேர்ந்த திருமதி ராபியா என்பவரின் கணவர் திரு. ஷக்கீர் என்பவர் ஆற்றில் குளித்துக் கொண்டிருந்த போது, எதிர்பாராத விதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், காட்டுவிளை கிராமத்தைச் சேர்ந்த திரு. ராஜன் என்பவரின் மகன் திரு. சிபின் என்பவர் கடலில் குளிக்கச் செல்லும் போது, எதிர்பாராத விதமாக கடல் அலையில் சிக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், சின்னக்காமன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. நாகராஜன் என்பவரின் மனைவி திருமதி கௌரி என்பவர் சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், ஓ.மேட்டுப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திருமதி அழகுமீனாட்சி என்பவரின் மகன் செல்வன் சுப்புராஜ் என்பவர் குளிக்கச் சென்ற போது, நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம் மற்றும் கிராமத்தைச் சேர்ந்த திரு. சம்பத்குமார் மற்றும் அவருடைய மனைவி திருமதி பேபிகமலம் ஆகிய இருவரும் சாலை விபத்தில் உயிரிழந்தனர்கள் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகுந்த துயரம் அடைந்தேன்.

பல்வேறு விபத்துக்களில் உயிரிழந்த மேற்கண்ட 14 நபர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்கண்ட துயரச் சம்பவங்களில் **உயிரிழந்த 14 நபர்களின் குடும்பத்திற்கு தலா ஒரு லட்சம் ரூபாய்** முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**